செய்தி வெளியீடு எண்: 686 நாள்: 18.11.2012

## செய்தி வெளியீடு

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் ஒவ்வொரு வருடமும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 1980–ம் ஆண்டு முதல் நடைபெற்றுவருகிறது. 32–வது இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2012 நவம்பர் மாதம் 14 ஆம் தேதி தொடங்கப்பட்டு வரும் 27 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இப்பொருட்காட்சியில் 29 மாநிலங்கள் மற்றும் இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் 33 அயல் நாடுகள் பங்கேற்று உள்ளன.

அனைத்து துறைகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கிட அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்திடும் வகையில் புதுடெல்லியில் நடைபெற்றுவரும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2012ல் தமிழ்நாடு அரங்கு செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் மூலம் மிக சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் இந்த வருடம் “திறனாற்றலில் இந்தியா” (Skilling India) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருப்பொருளை மையமாககொண்டு மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை கோயிலின் தோற்றத்தை முகப்பாககொண்டு தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், தஞ்சாவூர் தட்டு, ஓவியங்கள், சிலை வடிவமைப்பு போன்றன அமையப் பெற்றுள்ளது. அரங்கிற்குள் மண் பானைகள் தயாரித்தல் மற்றும் சிற்பக் கலைகளின் மாதிரிகள் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மர சிற்பங்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் வரைதல், முத்து, பவளம், மாலைகள் கோர்த்தல் மற்றும் மூலிகைகளின் மூலம் மருந்து தயாரித்தல் போன்றவைக்கான உயிர்க்காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு முன்னோடி திட்டங்களான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மடிக்கணினிகள் வழங்குதல், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க பரதநாட்டியம், காஞ்சிபுரம் பட்டு நெய்தல் போன்றன அமையப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு அரங்கில் செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு சுற்றுலாத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், வேளாண்மைத் துறை, வேளாண் வணிகத் துறை, தோட்டக்கலை துறை, கோ–ஆப்டெக்ஸ், பூம்புகார், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் ஆகிய 13 அரசுத் துறைகள் பங்கேற்று சிறப்பான

முறையில் துறையின் சாதனைகள், திட்டங்கள் மற்றும் நேரடி காட்சிகளாக பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும் தங்களது மாநில நாள் விழாவினை கொண்டாடி வருகின்றனர். அதன்படி "தமிழ்நாடு நாள்" விழா இன்று 18.11.2012 புதுடெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள "லால் சௌக்" கலையரங்கில் மிக சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் திரு. ஜஸ்பிர் சிங் பஜாஜ், இ.ஆ.ப., ஆகியோர்கள் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி "தமிழ்நாடு நாள்" விழாவினை தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க பரதநாட்டியம் மற்றும் கிராமிய கலைநிகழ்ச்சிகளான, கரகாட்டம், மயிலாட்டம், காளியாட்டம், நையாண்டி மேளம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் முன்னதாக மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறைஆணையர் திரு. ஜஸ்பிர் சிங் பஜாஜ், இ.ஆ.ப., ஆகியோர்கள் "திறனாற்றலில் இந்தியா" (Skilling India) என்ற கருப்பொருளை மையமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கித்தினை பார்வையிட்டார்கள்.

*********

வெளியீடு:

இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9